# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 2242/F/2024**

திரு.A.செங்கோடவேல் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ),
கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606202. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.A.செங்கோடவேல் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.D.ராஜசேகர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ், 15/02/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி அவர்களின் குறிப்பாணை கடிதம் எண்.ந.க.எண்: அ2/894/2022, நாள் 05.12.2023ல் கண்டுள்ள குறிப்பாணை தங்கள் அலுவலகத்திற்கு எப்போது கிடைத்தது.

அதன் மீது நடவடிக்கை எடுத்த விவரம் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அரசாணை எண்.73இன் படி மனுதாரருக்கும் உரிய அலுவலருக்கும் தெரிவிக்கப்பட்டதா எனில் அக்கடித நகல் தருக என்பன போன்ற 3 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 27.02.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)ன் கீழ் 25.04.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 27.02.2024 மற்றும் 27.03.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்கள் மற்றும் ஒப்புகை அட்டையின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (07.04.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, பொது அதிகார அமைப்பினால் 27.02.2024 மற்றும் 27.03.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து இந்த புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2242/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ),
கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606202.

**<u>புகார்தாரர்:-</u>**

திரு.ஆ.செங்கோடவேல்,
எண்.256, காட்டுக்கொட்டாய்,
நீலமங்கலம் அஞ்சல்,
கள்ளக்குறிச்சி-606202.

Copy to file: KR/PA